IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 279/2024

dated : 10.03.2026

P.W.2

Name பாலமுருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். என் பாட்டிக்கு பாத்தியப்பட்ட நகைகளை பொறுத்து பாகப்பிரிவினை கேட்டுள்ளார் மேற்படி நகையை பிரதிவாதிகள் பால்ராஜ் என்பவர் மூலமாக எனது பாட்டிக்குரிய 100 பவுன் தங்க நகையை மேலகரம் பாண்டியன் கிராம வங்கி கிளையில் அடகு வைத்து மீட்டுள்ளார் என்றும் மேற்படி சங்கதிகள் சம்பந்தமாக பால்ராஜ் எனது தாயாரிடம் கூறிய விபரத்தை நான் எனது அலைபேசியில் பதிவு செய்தேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரிதான். நான் அந்த வீடியோவை பால்ராஜிற்கு தெரியாமல்தான் பதிவு செய்தேன் அது பால்ராஜ் அனுமதியில்லாமல் மோசடியாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் வீடியோவாக பதிவு செய்யப்போகிறேன் என்ற விவரத்தை தெரிவித்து அவர் கூறிய விவரங்களை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் வீடியோவாக பதிவு செய்த விவரத்தை பால்ராஜிடம் தெரிவித்தேன். மூன்று மாதம்

கழித்து தெரிவித்தேன் தேதி ஞாபகமில்லை. அதை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளதாக கூறினேனா என்றால் கூறினேன். பால்ராஜை நீதிமன்றத்திற்கு அழைத்து சாட்சியமளிக்க வரவழைக்க முடியும் அதற்கு தயாராக உள்ளேன். பால்ராஜ் மேலகரம் பாண்டியன் கிராம வங்கியில் அடகு வைத்ததாக சொன்னார். வங்கி அலுவலரை அழைப்பாணை மூலம் வரவழைத்து பால்ராஜ் அடகு வைத்த விவரங்களை நிரூபிக்க இயலும் என்றால் சரிதான். இன்றிலிருந்து சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் வீடியோ பதிவு செய்தேன். வழக்கு தாக்கல் செய்யும்போதும் வீடியோ பதிவு செய்யப்பட்டிருக்கும் விவரத்தை வழக்குரையில் கூறவில்லை. நான் பதிவு செய்த அலைபேசி எனக்கு சொந்தமானது என்பதைக் காட்ட அது வாங்கப்பட்ட பில்லை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். நான் கணினியில் நிபுணர் அல்ல. நான் தாக்கல் செய்துள்ள சான்றிதழில் நான் சமர்ப்பித்துள்ள பென்டிரைவ் எந்த நிறுவன தயாரிப்பு அது எவ்வளவு சேமிப்பு திறன் கொண்டது என்ற விவரங்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் சான்றிதழில் குறிப்பிட்டுள்ள பென்டிரைவ் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பென்டிரைவ் வெவ்வேறானது என்றால் சரியல்ல. பால்ராஜ் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் 100 பவுன் என்று குறிப்பிட்டுள்ளேன். வீடியோவில் அவர் நகையின் அளவு பற்றி கூறவில்லை. அந்த வீடியோ 3 முதல் 4 நிமிடங்கள் வரை ஓடக்கூடியதாகும். பால்ராஜ் அந்த வீடியோவில் ஒரே ஒரு சங்கிலி என்று மட்டும்

குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 100 பவுன் நகை இருப்பதாக அவர் குறிப்பிட்டுக் கூறவில்லை என்றால் சரிதான். அந்த சங்கிலி யாருக்கு சொந்தமானது என்று பால்ராஜ் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான் நான் கேட்ட பின்னர் குறிப்பிட்டு கூறியுள்ளார் என்றால் சரிதான். என் மாமார் மூன்று பேரும் கொண்டு வந்து கொடுத்த நகையை அடகு வைத்தேன் அவர்கள் பணம் செலுத்தினார்கள் நான் திருப்புவதற்கு மட்டும் கையொப்பம் போட்டேன் என்று கூறியிருக்கிறார் என்றால் சரிதான். அடகு வைக்கும்போது நீயும் வந்திருந்தால் (என் தாயார்) அதை திருப்பும்போதும் உன்னையும் வைத்து கொடுத்திருப்பேன் என்று கூறியிருப்பார். என் அம்மா பால்ராஜிடம் பேசும்போது என் தங்கையும் உடனிருந்தாரா என்று கேட்டபோது பால்ராஜ் இல்லை என்று கூறியிருக்கிறார் என்றால் சரிதான். பால்ராஜ் என்ன நகையை அடகு வைத்திருந்தாரோ அந்த நகைதான் என் மாமாக்கள் மூன்றுபேரும் கொடுத்ததாக அர்த்தம் என்றால் சரிதான். நமக்கு நகை, பணம் , பொருள் எதுவும் தேவையில்லை என்றும் இருந்தாலும் அவை என்ன ஆனாது என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக கேட்க வந்தோம் என்று கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பூரா நகையும்தானே என்று கூறியபோது பால்ராஜ் ஒரு நகைதான் என்று குறிப்பிட்டுக் கூறியுள்ளார் என்றால் சரிதான். என் தாயாருக்கு பங்கு கேட்கும்போது குடும்பத்தின் கடனிலும் அவருக்கு பங்கு உண்டு என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளதுபோல் என் தாத்தா, பாட்டிக்கு சொந்தமாக 100 பவுன் நகை ஏதும் இருந்ததில்லை என்றும் அவ்வாறு

இருந்திருந்தால் நாங்கள் அப்போதே கேட்டிருப்போம் என்றும் கேட்காமல் விட்டிருக்க மாட்டோம் என்றும் சொன்னால் சரியல்ல. தாத்தா பாட்டி மறைவு துக்க நிகழ்ச்சியின்போது கேட்டோம் அப்போதே எங்களை பங்கு கேட்கக்கூடாது என்று மிரட்டினார்கள். பாட்டி இறந்த 3 ஆண்டுகள் கழித்துதான் என் தாத்தா இறந்துபோனார் என்றும் என் தாத்தாவை என் சித்தி முப்புடாதிதான் கவனித்துக் கொண்டார் என்றால் சரியல்ல. என் பாட்டி இறந்த 2 ஆண்டுகள் கழித்து என் தாத்தா இறந்துபோனார் என் தாத்தா இறக்கும்போது சித்திக்கு திருமணமாகியிருந்தது எனவே அவர் கவனித்துக் கொண்டிருந்தார் என்பது தவறாகும். என் பாட்டி இறந்தபோது அவர் அணிந்திருந்த 6 பவுன் அல்லது சற்று கூடுதலான நகையையும் சேர்த்து என் சித்திக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றும் அவ்வாறு திருமணம் செய்து வைக்கும் செலவில் கூட என் தாயார் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தாத்தா இறந்தபின்னர் என் தாத்தா பாட்டிக்கு சொந்தமான பண்ட பாத்திரங்கள் என் தாயாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. என் தாத்தா இறந்தபின்னர் 2ம் தபசில் சொத்தின் மேல்தளத்தை என் தாயாருக்கு ஒதுக்கி அந்த வீட்டிலுள்ள மாடிப்பகுதியை வாடகைக்கு விட்டு தற்போதும் வாடகையை பெற்று வருகிறோம் என்றால் சரியல்ல. 2019ல்தான் அவ்வாறு ஒதுக்கப்பட்டது. 2019ம் ஆண்டு எங்களுக்குள் ஒரு பாகப்பிரிவினை நடைபெற்றது என்றால் சரியல்ல. மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து காவல் கண்காணிப்பாளர்

அறிவுரைப்படி மாடி பகுதி எங்களுக்கு ஒதுக்கப்பட்டது. என் மாமாக்கள் மூவரும் வசதியானவர்கள் அல்ல என்றும் இன்றளவும் வெள்ளையடிக்கும் வேலைக்கு சென்று வருகிறார்கள் என்றும் மூவரும் பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்தை தனிதனியாக அனுபவித்து வரும் நிலையில் ஏற்கனவே பாகப்பிரிவினை செய்யப்பட்ட சொத்தை மீண்டும் பாகப்பிரிவினை கோரி நாங்கள் தொடர்ந்த வழக்கு செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரை சொத்துக்கள் அனைத்தும் நாளது தேதிவரை தாத்தா பாட்டி பெயரிலேயே இருந்து வருகிறது. எனவே பிரதிவாதிகளுக்கு பாகப்பிரிவினையை ஒதுக்கு அனுபவித்து வருவது தவறாகும். நான் கொடுத்த சான்றிதழில் பென்டிரைவ் பற்றிய விவரங்கள் இல்லாததால் நான் வழங்கிய சான்றிதழும் பென்டிரைவில் உள்ள பதிவுகளும் சான்றாவணமாக கருதக்கூடியதல்ல என்றும் அது நிராகரிக்கதக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.10 17:30:57 +0530